## இராமநாதபுரம் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



இராமநாதபுரம், செப். 26-

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இராமநாதபுரம் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் இன்று (26.09.2023-செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி அளவில் இராமநாதபுரம் பாரதிநகர் வைஸ்ராய் மஹாலில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் சுதர் வாரியத் துறை அமைச்சர், கழக நேர்தல் பணிக் குழு தலைவர் ஆர்.எஸ்.இராஜ கண்ணப்பன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி. ராஜா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர். ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக, வார்டு கழக, கிளைக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள், உள்ளிட்ட கழக இளைஞர் அணி தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா
2. மாநில இளைஞர் அணி மாநாடு
3. இல்லந்தோறும் உறுப்பினர் சேர்க்கை
4. மாரத்தான் போட்டி, பேச்சுப்போட்டி 5. கலைஞர் நூலகம் அமைத்தல்

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

---

### தி.மு.க. மகளிரணி – மகளிர் தொண்டரணி

## மாவட்ட புதிய நிர்வாகிகள் கூட்டம் தள்ளிவைப்பு!

தி.மு.க. மகளிரணி, மகளிர் தொண்டரணி மாவட்ட புதிய நிர்வாகிகள் அறிமுகக்கூட்டம் 26/09/2023 அன்று திருச்சியில் நடைபெறுவதாக இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் கூட்டம் தள்ளிவைக்கப்படுகிறது.

கூட்டம் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

**ஜெ. ஹெலன் டேவிட்சன்**
மாநில மகளிர்
அணிச் செயலாளர்

நாமக்கல் **ப.இராணி**
மாநில மகளிர்
தொண்டரணிச்
செயலாளர்

---

### திருத்துறைப்பூண்டி நகர இளைஞரணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## மாநில அளவிலான மாபெரும் கால்பந்து விளையாட்டுப் போட்டி!

திருவாரூர்,செப். 26-

திருத்துறைப்பூண்டி நகர இளைஞரணியின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா பிரமாண்ட கால்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. மாநில இளைஞரணி துணை செயலாளர் ந.இளையராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ். பாண்டியன், நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன், மாவட்ட அமைப்பாளர் ஏ.எஸ்.குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ் நாடு முதல்வர் - திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் இளைஞர் அணி மாநில செயலாளர் உதயநிதி ஸ்டாலின்அவர்களின்ஆலோசனைகளின்படியும், திருத்துறைப்பூண்டி நகர தி.மு.க. இளைஞரணி சார்பில் மாநில அளவிலான கால்பந்துப் போட்டி நடைபெற்றது.

இந்த விளையாட்டு போட்டிக்கு தலைமைச் செயற்குழு உறுப்பினரும் நகரக் கழகச் செயலாளருமான ஆர்.எஸ்.பாண்டியன் தலைமை ஏற்றார். மாநில இளைஞரணி துணைச் செயலாளர் நா.இளையராஜா போட்டியை துவக்கி வைத்தார். திருத்துறைப் பூண்டி நகர்மன்றத் தலைவர் கவிதா பாண்டியன் இறுதி ஆட்டத்தை துவக்கி வைத்தார்.

போட்டியில் வெற்றி பெற்ற அணியினருக்கு மாநில இளைஞரணி துணை செயலாளர் இளையராஜா, நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எஸ்.குமார், துணை அமைப்பாளர்கள் வி.கே. முருகானந்தம், சி.கே.எழிலரசன், எம்.பி.எடிசன், வினோத் குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் எஸ். ஜாகிர் உசேன் மற்றும் நகரக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகளும் பரிசுகளை வழங்கினார்கள்.

நகர இளைஞரணி அமைப்பாளர் வசந்த் நன்றியுரை கூறினார்.

---

### அறிஞர் அண்ணா நகர் - கம்பீர விநாயகர் ஆலய

## அறங்காவலர் குழுத் தலைவராக சோ.துரைப்பாண்டியன் நியமனம்!

### மாவட்டச் செயலாளர் தொ.ஆ.ரவியை சந்தித்து வாழ்த்து!

கோவை, செப். 26-

கோவை வடக்கு மாவட்டம், கவுண்டம்பாளையம் பகுதி, அறிஞர் அண்ணா நகர் கம்பீர விநாயக ஆலய அறங்காவலர் குழுத் தலைவராக சோ.துரைப்பாண்டியன் நியமிக்கப்பட்டதையடுத்து, மாவட்டச் செயலாளர் தொ.ஆ.ரவியை மரியாதை நிமித்தமாக சந்தித்து நன்றி தெரிவித்தார்.

அறிஞர் அண்ணாநகர் அருள்மிகு கம்பீரசித்தி விநாயகர் ஆலயத்திற்கு தமிழக அரசின் அறநிலையத் துறையின் சார்பில் அறங்காவலர் குழுத் தலைவராக 35வது வட்ட அவைத் தலைவர் சோ.துரைப் பாண்டியனை நியமனம் செய்யப்பட்டதற்கு பரிந்துரை செய்த கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.ஆ.ரவியை மரியாதை நிமித்தம் சந்தித்து நன்றி தெரிவித்து வாழ்த்துப் பெற்றார்.

மேலும் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் ராஜாமணி, கவுண்டம்பாபாளையம் பகுதி துணைச் செயலாளர் திருமதி கண்ணகி முருகானந்தன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சோ. துரைப்பாண்டியனுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் முன்னாள் மாவட்டக் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் துணை அமைப்பாளர் கா.பொன்னரசு மற்றும் கோவை வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சூரியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---

### கடலூர் கிழக்கு மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர்

## ப.அப்பு சந்திரசேகரனின் தாயார் ப.வள்ளி மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

கடலூர், செப். 26 -

கடலூர் கிழக்கு மாவட்டம், சிதம்பரம் நகரக் கழகம் - நினைவில் வாழும் பழனிசாமி (தலைமை ஆசிரியர் ஓய்வு)யின் துணைவியாரும், கடலூர் கிழக்கு மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளரும் 23வது வார்டு நகர்மன்ற உறுப்பினருமான ப.அப்பு சந்திரசேகரன், ப.பாஸ்கரன், ப.கணேசன், ப.சுரேஷ் ஆகியோரின் தாயாருமான ப.வள்ளி அவர்கள் நேற்று (25.9.2023-திங்கள்) காலை 8 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (26.9.2023 - செவ்வாய்) காலை 9 மணியளவில், சிதம்பரம் மன்னார் குடி தெருவில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

---

# மகளிர் இட ஒதுக்கீடு சட்டமும், கலைஞரும், தி.மு.க. எடுத்த முயற்சிகளும்!

**நேற்றையத் தொடர்ச்சி**

2008- ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் சட்ட அமைச்சராக இருந்த பரத்வாத் அவர்கள் மாநிலங்களவையில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை முன்மொழிந்த போதிலும், அவையில் ஏற்பட்ட பெரும் அமளியால் அம்மசோதா நிறைவேறவில்லை. மாநிலங்கள் அவையில் மகளிர் மசோதா வந்த நேரத்தில் கருத்தொற்றுமையின்றிப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது .மகளிர் மசோதாவைக் கிழித்தெறிந்ததோடு, அந்த அவையில் "…மகளிர் மசோதா நிறைவேறினால் இந்த அவையிலேயே விஷம் குடித்துக் செத்துப் போவேன்.." என்று அவையில் இடம் பெற்றிருந்த ஐக்கிய ஜனதாதள எம். பி .சரத் யாதவ் கூறி அச்சுறுத்திய சரித்திரமும் உண்டு. இது குறித்துக் கலைஞர் அவர்கள் அறிக்கை விடுத்துக் குழப்பங்களை நீக்க முன்வர வேண்டுமென அவ்வப்போது அரசியல் கட்சித் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து வந்தார்.

அது மட்டுமல்லாமல், ஆங்கில ஏடுகளில் வெளிவந்த தலையங்கங்களைக் எடுத்துக் கையாண்டு, இந்திய ஒன்றிய அரசின் கவனத்திற்கும் கொண்டு சென்றார். "…Don't fail the Women of India" …(இந்திய நாட்டு மகளிரை ஏமாற்றி விடாதீர்கள்). எனும் தலைப்பிட்ட இந்து தலையங்கத்தில் "….The United progressive Alliance Government's announcement of its intention to push forward the Women's Reservation Bill without any delusion in the coming week is the best political news we have had for a long time . If all goes according to plan the long pending bill will be adopted by both houses of Parliament on or around March 8 which marks the Centenary of International Women's day "….என்று தொடங்கி எழுதியிருந்ததைக் கலைஞர் அவர்கள் சுட்டிக்காட்டி இருந்தார்.

மேலும், Indian Express நாளிதழ் தலையங்கத்தில்…." The Government's renewed efforts to push ahead with the Women's reservation Bill underline the political value of the measure in its eyes rather than the possibility of enactment "…என எழுதி இருந்ததையும்; "இது நல்ல நேரம் ,நழுவ விடாதீர்கள்" எனவும் குறிப்பிட்டுக் காட்டித், தாம் எழுதிய கலைஞர் கடிதம் மூலம் முரசொலி எட்டில் (732010) வலியுறுத்தியிருந்தார்.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஆட்சியில் (9.3.2010) மாநிலங்களவையில் நிறைவேற்றிய மசோதா காலாவதியாய் போயிற்று. ஆக, நாடாளுமன்ற, 'சட்டமன்றங்களில், பெண்களுக்கான 33% இட ஒதுக்கீடு மசோதா 1996, 1998, 1999, 2002, 2003, 2005, 2008, 2010, ஆகிய ஆண்டுகளில் நாடாளுமன்ற மாநிலங்களவையில் முன்மொழியப் பட்டவை காலாவதியாகி விட்டன.அதிலும் 1998, 1999, 2002, 2003, ஆண்டுகளில் நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்தும், போதிய ஆதரவின்றி மகளிர் மசோதா நிறைவேறவில்லை.

இச் சூழ்நிலையைத் தெரிந்து கொண்ட கலைஞர் அவர்கள், நெஞ்சம் பொறுக்காமல் பொங்கி எழுந்து, "வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழி உடைந்து விடுகிற கதையாக இருந்து வருகிறது" என்று அறிக்கை விடுத்தார்.

"சுதந்திரம் கேட்கும்போது, மொழிவாரி மாநிலம் கேட்கவில்லை; அதைப்போல இட ஒதுக்கீடு வரட்டும்; பிறகு பார்க்கலாம்" "…அதுபோலச் சுதந்திரப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, வகுப்புவாரி பிரதிநிதித்துவ உரிமைக் குரலும் கேட்டது. ஆனால் விடுதலை பெற்ற பிறகு பிரதமர் நேரு காலத்தில் 1951இல் தான் அரசியல் சட்டத்தின் முதல் திருத்தமே கொண்டுவரப் பட்டது என்பது வரலாற்றுச் சான்றாக இருக்கிறது. எனவே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப் பட்டோருக்கான சமூக நீதியை உறுதிப்படுத்திட முழுவதும் வழி காணலாம். இதற்கு முன்னராக மசோதா வழிகாட்டும் வாய்ப்பு இருக்கிறது"… என்று கலைஞர் அவர்கள்தான் எழுதிய தாய் எனும் நூல் வெளியீட்டின் போதும், கடிதங்கள் வாயிலாகவும், இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் அரியமுறையில் வேண்டுகோள் விடுத்து, வலியுறுத்திப் பேசினார்.

"முதலில் வாய்ப்பில் கிடைத்த பழத்தைப் பங்கீடு செய்யலாம்; பிறகு உள்ளே இருக்கும் சுளை யாருக்கு எவ்வளவு? என்று பிரித்துக் கொள்ளலாம்".. என்று தாம் எழுதிய கடிதம் ஒன்றில், பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவின் நோக்கத்தை வற்புறுத்தித் தெரிவித்து இருந்தார்.முதலில் விருந்துக்கான அழைப்புகளை ஏற்று வீட்டுக்குள் செல்வோம் பின்னர் விருந்தில் படைக்கப்படும் பண்டங்களில் நம் உடலுக்கு ஒத்துக் கொள்ளக் கூடியது எது? ஒவ்வாதது எது? என்பதைச் சொல்லி அதற்கு ஏற்ப, பரிமாறச் சொல்வோம் "என்றும், பொதுக் கருத்துப் பற்றி அறிஞர் ரூசோவின் கருத்து என்ன? என்பதையும், பட்டியலிட்டு அக்கடிதத்தில் எழுதிக்காட்டியிருந்தார் ."..வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது, மகளிர் இட ஒதுக்கீட்டுக்கு மேற் கொள்ளப்பட்ட மனமார்ந்த முயற்சிகளை நினைவில் கொண்டு;. நல்ல சந்தர்ப்பம் இருக்கிறது இதை நழுவ விடக்கூடாது என்று எண்ணி மகளிர் இட ஒதுக்கீட்டினை நிறைவேற்றிட பிரதமர் நரேந்திர மோடி ஆர்வத்தோடு முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்" என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு நினைவுபடுத்தி 2014 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் கடிதம் ஒன்றைக் கலைஞர் எழுதி இருந்தார்.

தி.மு.க. பொறுத்த வரை இன்று, நேற்று அல்ல; பல ஆண்டு காலமாக இந்த மகளிர் இட ஒதுக்கீடு பிரச்சினையில் ஆழ்ந்த அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு கழக மாநில மாநாட்டிலும், பொதுக்குழு செயற்குழுவிலும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திலும், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் இவற்றின் மூலமாகவும், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களால் அவையில் பேசியும், தீர்மானங்கள், கடிதங்கள் எழுதுவதன் வாயிலாக வலியுறுத்தியும், ஆளும் கட்சியாக இருந்த போதும், எதிர்க்கட்சியாக இருந்த போதும் போராடியும்,வாதாடியும் வந்த நீண்ட வரலாறு அதற்குண்டு. அவ்வப் போது குடியரசுத் தலைவர், பிரதமர்கள் ஆகியோரைச் சந்தித்து மசோதா நிறைவேற்றிடத் தலைவர் கலைஞர் அறிவுரைகளைப் பெற்று வற்புறுத்தியும், வலியுறுத்தியும் தி.மு.க.வந்ததுள்ளது.

2005 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று வேலூர் மண்டல தி.மு.க. மாநாடு நடத்திட "மகளிரே ஒன்று கூடுங்கள்" என்ற தலைப்பில் தலைவர் கலைஞர் எழுதிய கடிதத்தின் வாயிலாக பெண்கள் கூடினர். அம்மகளிர் மாநாட்டில் போட்ட தீர்மான அறிக்கையின் வாயிலாக மகளிர் இட ஒதுக்கீடுச் சட்டத்தை நிறைவேற்ற ஒன்றிய அரசை வலியுறுத்தப்பட்டது. 2007 ஜன வரி 6அன்று கூடிய கழக உயர்நிலைச் செயல் திட்டக் குழுவில் மகளிர் சட்டம் கொண்டு வருவது குறித்து வலியுறுத்தி பேசப்பட்டது..2007 பிப்ரவரி 10 அன்று தலைவர்கலைஞர், தளபதிமு.க.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில், குடியரசுத் தலைவராக வர இருந்த பிரதிபா பாட்டீல் முன்பு, 10 மணி நேரத்திற்கு மேலாக, முழக்கத்துடன் கூடிய பெண்கள் நடத்திய மாபெரும் பேரணி அண்ணா சாலையில் நடத்தப்பட்டது.. 2008 ஜீன் திங்கள் 14 & 15 அன்று கடலூர் மகளிர் மாநாடு நடத்திச் சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் 33 விழுக்காடு பெண்களுக்கான மசோதாவை நிறைவேற்றக் கோரி முடிவு எடுக்கப்பட்டது.

தலைவர் கலைஞரின் அறிவுரை பெற்று, செயல் தலைவராக இருந்த தளபதி மு.க. ஸ்டாலின் ஆணைக்கேற்ப, (20.3. 2017) திங்கள் கிழமை அன்று டெல்லி ஜந்தர் மந்தர் பகுதியில் மாநிலங்களவை உறுப்பினராக இருந்த கனிமொழி தலைமையில் பல்லாயிரக்கணக்கான மகளிர் ஒன்று திரண்டு மாபெரும் போராட்டம் நடத்தப்பட்டது.அந்த ஆர்ப்பாட்டத்தில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.கே.எஸ். இளங்கோவன், திருச்சி என்.சிவா உள்ளிட்ட காங்கிரஸ்,கம்யூனிஸ்ட் கட்சி, தேசியவாத காங்கிரஸ் கட்சிகளின் தலைவர்களும், சமூக நல மகளிர் நல ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். தலைவர் தளபதி அவர்கள் பிரதமர் மோடி அவர்களுக்கு அறிக்கைகள் வாயிலாகவும், பல முறை எழுதிய கடிதத்தின் வாயிலாகவும், மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தின் அவசியத்தையும், கடமையையும் நினைவுபடுத்தி வலியுறுத்தி வந்துள்ளார்.

12 – சதவீதத்துக்கு மேல் மகளிருக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க முடியாத நாடு என்ற தவறான கருத்து நம் மீது உள்ளது. ஆகவே, "மகளிர் மசோதாவை நிறைவேற்றுங்கள்" என்று பெண் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்து (5.3.2016) அன்று குடியரசுத் தலைவராக இருந்த பிரணாப் முகர்ஜி ஒன்றிய அரசை வலியுறுத்திப். பேசினார்.

கடந்த வாரத்தில் நடைபெற்ற அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில், மோடி தலைமையிலான பா.ஜ.க அரசு, மகளிர் மசோதாவை உடனடியாக நிறைவேற்றிடக் கோரி வலியுறுத்தித் தீர்மானம் போடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் தான் "நாரி சக்தி வந்தன் அதினியம் "எனும் தலைப்பில் (மகளிருக்கு அதிகாரம் அளிக்கும்) சட்டம் ஒன்றினை நாடாளுமன்றச் சிறப்புக் கூட்டத்தில் சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக் வால் மூலம் மக்களவையில் (19.9.23) அன்றும், மாநிலங்களவையில் (20.9.2023) அன்றும் அறிமுகம் செய்து இரு அவைகளிலும் மோடி அரசு நிறைவேற்றி உள்ளது.

கடந்த 9 – ஆண்டுகால பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில், பிரதமர் மோடியின் நாடாளுமன்ற வருகையானது 0.01 என்று வல்லுனர்களால் பதிவு செய்யப்பட்ட நிலையில், புதிய பாராளுமன்றத்தில் 13 ஆண்டு காலமாக கிடப்பில் இருந்த மகளிர் இட ஒதுக்கீடு சட்டம் (அரசியலமைப்புச் சட்டம் 128ஆவது திருத்த மசோதா 2023,) முதல் சட்ட மசோதாவாக பல்வேறு நிபந்தனைகளுடன் கூடிய குறைபாடுகள் அமைந்ததாக புதிய நாடாளுமன்றத்தில், அறிமுகம் செய்திருக்கிறது மோடி அரசு.

நாடாளுமன்றத்தில் ஏழாவது முறையாகக் கொண்டுவந்துள்ள 33 சதவீத மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தில், மோடி அரசின் மூலம் முட்டுக்கட்டைகள் தொடர்வதற்கான காரணங்கள் பல உள்ளன. இது பற்றித் தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமானது, பாதிக்கு மேற்பட்ட (50%) மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்களிலும் இம்மசோதா நிறைவேற்றப்பட வேண்டும். இவை நிறைவேற்றப்பட்டாலும், மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அதன் பின்பு தொகுதிகள் மறுசீரமைப்பு, வரையறை செய்யப்பட வேண்டும். பத்தாண்டுக்கு ஒரு முறை என்றபடி 2011இல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்ட பின்னர், 2021 நடத்தியிருக்க வேண்டும்; கொரோனா காலம் இருந்ததால், அது தவிர்க்கப்பட்டு நிறுத்தப்பட்டது. ஜி20 நாடுகளிலே இந்தியா மட்டுமே மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தாமல் இருக்கிறது.

எனினும், விரைவுப்படுத்தித் தொகுதி எல்லை "மறுவரையறை செய்துகொள்ளலாம். அதன் பின்பு 2029 நாடாளுமன்றத் தேர்தலில் மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என்ற சிக்கல் எழுந்து இருக்கிறது. 2025ஆம் ஆண்டில் தான், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடக்கும் . எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருப்பதால், மகளிர் இட ஒதுக்கீடு வருவதற்கு இல்லை. 2025 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தி, தொகுதி வரையறை செய்து, 2029 ஆம் ஆண்டு 33% மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தின் மூலம் தேர்தலில் பங்கேற்கப் பெண்களுக்கு வாய்ப்பு அளிக்க முடியும்.

ஏற்கனவே, சாதி வாரி கணக்கெடுப்பு உடனே நடத்தப்பட வேண்டும் என்றும்; பிரதமருக்கும், ஒன்றிய அமைச்சர்களுக்கும் கலைஞர் (2015ஜீலை) தொடர்ந்து எழுப்பி வந்த கோரிக்கை போல, தமிழ் நாடு முதல்வர் தளபதி அவர்களும் அடிக்கடி கடிதம் எழுதி வேண்டுகோள் வைத்து உள்ளார்கள். தற்பொழுது சாதி வாரி கணக்கெடுப்பு உடனே நடத்தப்பட வேண்டும் என்று அநீதிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும்; பெண்களைச் சம பங்காளிகளாக நடத்தப்பட வேண்டும் என்றும் தம் கணவர் இராஜீவ் காந்தி காலத்தில் கொண்டு வந்த மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்திற்கு உயிர் வழங்கப்பட வேண்டும் என்று சோனியா காந்தி நாடாளுமன்ற அவையிலும், வெளியிலும் தன் வேண்டுகோளை வைத்துள்ளார். அதைப்போல இராகுல் காந்தி பிற்படுத்தப்பட்ட வர்களுக்கு அதிகாரம் வழங்கும் வகையில் சட்டத்தில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு பிரதிநிதித்துவம் வேண்டும் என்றும், சமூக நீதி கண்ணோட்டத்தோடு ஒன்றிய அரசின் நிர்வாகத்தில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்கு அதிகாரம் வழங்கப்படவும் வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார்.

இப்போது 2029 ல் தான் இட ஒதுக்கீட்டை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அன்னை சோனியா காந்தி, இராகுல் காந்தி இந்தியா, கூட்டணியைச் சேர்ந்த பொதுவுடமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், தி.மு.க.வைச் சேர்ந்த டி.ஆர். பாலு, கனிமொழி, தயாநிதி மாறன், ஆ. ராசா, திருச்சி சிவா, தமிழச்சி தங்கபாண்டியன் உள்ளிட்ட பல கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றுப் பேசி உள்ளனர்.

மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தை ஆதரிக்கிற அதே நேரத்தில், தமிழகம் உட்பட தென்னிந்தியாவின் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கிற விதத்தில், தலைக்கு மேல் தொங்குகிற கத்தியாக தொகுதி வரையறை உள்ளது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையில், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கும் அதே நேரத்தில், தமிழகத்தை, தென்னகத்தை மிகவும் பாதிக்கும். இது ஒரு அரசியல் சூழ்ச்சி என்பதை மறந்து விடக்கூடாது. அரசியல் விழிப்புணர்வு மிக்க தமிழ்நாட்டை வஞ்சிக்கிற அநீதியான முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும் என்றும்; தென்னிந்திய மக்களுக்கு எந்தத் தீங்கையும் செய்து விடமாட்டோம் என்றும்; உத்தரவாதத்தை ஒன்றிய அரசு தர வேண்டும் தென்னிந்திய மக்களை ஆட்கொண்டுள்ள அச்சத்தை போக்கிட வேண்டும் என்று எச்சரிக்கை செய்து தளபதி ஸ்டாலின் எச்சரிக்கை செய்துள்ளார்.

முதல்வர் தளபதி கூறுவதுபோல, மக்கள் தொகை கணக்கெடுப்பு என்ற அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளில் 8 எம்.பி.க்கள் குறைய வாய்ப்புகள் உள்ளதால், 31ஆகும். வட மாநிலங்களில் 30 இலட்சம் மக்களுக்கு ஒரு எம்.பி என்ற விதத்திலும், தமிழ்நாடு 18 இலட்சம் மக்களுக்கு ஒரு தொகுதி என்ற விதத்தில் அமைவதால், குறையவாய்ப்பு உள்ளது. உத்தரபிரதேசத்தில்11, பீகார்10 இராஜஸ்தான்6, மத்திய பிரதேசம்4, குஜராத் அரியானா, சட்டிஷ்கர், சார்கண்டு, டெல்லி, தலா ஒரு தொகுதி அடிப்படையில் அதிகரிக்கும். கேரளாவில் 20தொகுதி தற்போது உள்ளதில்,8 தொகுதிகள் குறைந்தால் 12 ஆகும். ஆந்திரா,தெலுங்கானா மாநிலங்களில் 42 தொகுதிகள் உள்ளன. இதில் 8 குறைந்தால் 34 ஆக குறைந்துவிடும். கர்நாடகத்தில்28 தொகுதிகளில் உள்ளன. இதில் இரண்டு குறைந்தால், 36 தொகுதிகளாகி விடும்.

கலைஞர் தலைமையில் இருந்த தி.மு.க. ஆட்சியில் தான் பெரியார் கனவை நினைவுபடுத்தும் விதமாக பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். உள்ளாட்சிகளில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு, காவல் துறையில் முதன்முதலாக பெண் காவலர்கள் முதல் டி.ஜி.பி. வரை நியமனம் முதுநிலை பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி, விதவை, மறுமணம், சாதி மறுப்பு திருமணம், பெண்கள் திருமணத்திற்கு உதவி, கிராமப்புற பெண் கல்வி வளர்ச்சி, பெண்களுக்கு 40 சதவீத அரசு வேலை வாய்ப்பு, தொடக்கப் பள்ளியை ஆசிரியர்களாக நியமனம், ஈ.வே.ரா. மணியம்மையார் டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி, டாக்டர் தர்மாம்பாள், அன்னை தெரசா, நாகம்மையார், அஞ்சுகம் அம்மையார், சத்தியா அமையார் போன்ற பேரால் பெண்களுக்குப் பல்வேறு திட்ட உதவிகள் 50 வயது கடந்த பெண்களுக்கு திருமண நிதி உதவி திட்டம் கிராமப்புற மகளிர் மகப் பேறு உதவி திருக்கோயில்களின் அறங்காவலர் குழு உறுப்பினர் மகளிர் சுய உதவிக் குழுக்கள், உருவாக்கி உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. தலைமைச் செயலாளராக மாலதி ஐ.ஏ.எஸ். உள்துறைச் செயலாளராக ஸீலா நாயகர், காவல்துறை தலைவராக லத்திகா சரண் ஐ.பி.எஸ்., பாராளுமன்ற அவைத்தலைவராக மீரா குமார், குடியரசுத் தலைவராக பிரதிபா பாட்டீல் போன்றோரை உயர்பதவியில் அமர வைத்து அழகுப் பார்த்தவர் கலைஞர் அவர்கள்.



**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்

அதுபோல் தளபதி தலைமையான தி. மு.க ஆட்சியில் பெண்களுக்கு அளவற்ற உதவிகள் புரிந்து வருகிறது. கட்டணமில்லாப் பேருந்து பயணம், மகளிர்க்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை, அரசு பள்ளியில் படித்து கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய், பெண்கள் பணிச் சுமையைக் குறைக்க தொடக்கப்பள்ளிக் குழந்தைகளுக்குச் சிற்றுண்டிச் திட்டம், உள்ளாட்சி அமைப்புகளில் மேயர், தலைவர், உறுப்பினர்கள் என ஐம்பது விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கிப் தளபதி அரசு சாதனை படைத்துள்ளது.

ஆசிரியர் பணி முதல் அறங்காவலர் குழு, அங்கன்வாடி வரை அரசுப் பள்ளிகளில் பெண்களுக்குப் பொறுப்புகள் வழங்கிப் பெருமைப்படுத்தித் தமிழ்ப் பூவுலகை. தன் பேனா விரலால் வரலாறுபடைத்தவர் கலைஞர். காவல்துறையில் முதன் முதலில் பெண்களுக்கு வாய்ப்பு தந்து அதிகாரிகளாக வலம் வர வைத்தவர் கலைஞர். அதுபோல் தி.மு.கழகத்தில் கிளைக் கழகம் முதல் தலைமைக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் வரை, பெண்களுக்குப் பொறுப்புகள் தந்து பெருமைப்படுத்திய அருமை பெருமைகள் கலைஞரையும் அவரைத் தொடர்ந்து தளபதியைச் சாரும் என்பதை இந்நாடு மறந்துவிடாது.

அரசியல் அரைவேக்காடுகள், ஆகாச, அண்டப் புளுகர்களான அண்ணாமலைகள், பாதம் தாங்கிப் பழனிச்சாமிகள், தி.மு.க.வும், கலைஞரும், தளபதியும் பெண்களுக்கு என்ன செய்தார்கள் என்ற கேள்வி எழுப்பி வருகின்றனர்.

இதுகுறித்து புழுதி வாரித் தூற்றும் அரசியல் காந்தாரிகளான அவர்களுக்கு தகுந்த விளக்கமான அறிக்கை ஒன்றை முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் (20.9.23) அன்று அளித்துள்ளார்.

பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டா? புலிகளால் புள்ளிமான்களுக்கு விடுதலை உண்டா? அதேபோன்று ஆணாதிக்கத்தால் பெண்களுக்கு விடுதலை கிடைக்காது. ஆகவே, வீடுகளில் அடைப்பட்டிருக்கும் பெண்கள் வீதிக்கு வந்து அரசியல், சமூக, பொருளாதார நடவடிக்கைகளில் பங்கேற்க வேண்டும் என்று சொன்னார் தந்தைபெரியார்.

அதைப்போல, 'தொட்டிலை ஆட்டும் கை தொல் உலகை ஆளும் கை' என்றார் பாவேந்தர் பாரதிதாசனார். எனவே, நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் 33 விழுக்காடு பெண்களுக்கான இடஒதுக்கீடு சட்டம் வெற்றி பெற வேண்டும் என்று அனைவரும் வரவேற்போம்!